உயர் ஊடக தார்மீக பொறுப்பை பின்பற்றியதாகவும் தெளிவானதாகவும் எழுதப்பட்டவைகளாக இருக்க வேண்டும்.

எழுத்தினதும் மொழியினதும் உயர் தராதரம் பேணப்பட்டிருக்க வேண்டும். செய்தி விவரணக் கட்டுரைகள் அல்லது சிறப்புக் கட்டுரைகள் இலகு நடையைக் கடைபிடிக்கும் சிறந்த விவரணக் கட்டுரையாளர்களை அடையாளம் காண்பதில் நடுவர்கள் தயாராக உள்ளனர். நேர்காணல்கள் இவ்வகைக்கு உட்படுத்தப்படவில்லை.

**இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் சிபாரிசிற்கமைய வழங்கப்படும் சிறப்பு விருதுகள்**

- பொதுமக்களது பாராட்டையும் கீர்த்தியையும் பெற்றமைக்காக வழங்கப்படும் டி.ஆர். விஜேவர்தன விருது.
- பத்திரிகைச் சுதந்திரத்தைப் பாதுகாத்தமைக்கான சேபால குனசேன விருது.
- தொடர்ச்சியான நீண்ட கால ஊடகப் பணிக்கான விருது.



# ஒழுங்கு விதிகள்

## 17 ஆவது வருடம்

## சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல் 2015 ஆம் ஆண்டிற்கானது



இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கம் 1999 ஆம் ஆண்டு முதல் சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கி கௌரவிக்கும் நிகழ்வை நடத்தி வருகின்றது. 2003 ஆம் ஆண்டு ஸ்தாபிக்கப்பட்ட இலங்கை பத்திரிகை ஸ்தாபனம் பத்திரிகைத்துறையில் சிறந்த தராதரத்தை உறுதி செய்ய வேண்டும் என்ற பொது இலட்சியத்தின் அடிப்படையில் விருதுக்குரிய வருடத்தில் திறமைகளை வெளிப்படுத்திய ஊடகவியலாளர்களுக்கு விருதுகளை வழங்கும் இந்நிகழ்வுக்கு இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்துடன் இணைந்து ஒத்துழைத்து வருகின்றது.

## சிறந்த பத்திரிகையாளர்களுக்கு விருது வழங்கல் என்றால் என்ன?

ஊடகவியலாளர்களின் தொழில் ரீதியான தரத்தை மேம்படுத்துவதற்காகவும் சிறந்த ஊடகத்துறையை ஊக்குவிப்பதற்காகவும் என்ற நோக்கில் நடத்தப்படுகின்ற ஒரே விருது வழங்கும் நிகழ்வு இதுவாகும். மேலும் இவ்வாறு விருது வழங்குவதன் மூலம் ஊடகத்துறையில் சிறப்பாக செயலாற்றுவதன் ஊடாக சிறந்த படைப்புக்களைச் செய்யும் ஊடகவியலாளர்களை தேர்ந்தெடுத்து பாராட்டுவது, ஊக்குவித்தல் மற்றும் அவர்களுக்கு தேசிய ரீதியாக அங்கீகாரத்தையும் பெற்றுக்கொடுக்கும் வகையில் இந்த விருது வழங்கும் நிகழ்வு நடத்தப்படுகின்றது.

## யார் விண்ணப்பிக்கலாம்?

இலங்கையில் ஊடகவியலாளர்களாக தொழில்புரியும் எவரும் விண்ணப்பிக்கலாம். இலங்கையில் வெளிவருகின்ற தினசரி அல்லது வாராந்த பத்திரிகைகளில் செய்தி அல்லது கட்டுரைகளை எழுதி அவை இலங்கையில் உள்ள பத்திரிகைகளில் பிரசுரமாகிய ஊடகவியலாளர்கள் இந்த விருதுக்காக விண்ணப்பிக்க தகுதி உடையவர்களாவர். விருதுக்காக விண்ணப்பிக்கும் ஊடகவியலாளர்கள் முழுநேர ஊடகவியலாளர்களாக அல்லது விருதுக்குரிய காலப்பகுதியில் குறைந்தபட்சம் 10 இற்கு குறையாத விடயங்கள் எழுதப்பட்டு அவை பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். ஊடகத்துறை மாணவர்களாக இருக்கின்ற சந்தர்ப்பத்தில் எழுதப்பட்டு பிரசுரமாகிய கட்டுரைகள் செய்திகள் தொடர்பாகவும் கவனம் செலுத்தப்படும்.

## பத்திரிகைக்கான வரைவிலக்கணம்

பத்திரிகையானது டப்லொய்ட் அல்லது பறந்த அளவு பரப்பைக் கொண்ட தாளில் பிரசுரமாகக் கூடியதாக இருக்கலாம். அத்துடன் விண்ணப்பிக்கும் காலப்பகுதியில் இலங்கையில் பதிவு செய்யப்பட்ட பத்திரிகையாக இருக்க வேண்டும். தினசரி அல்லது வாராந்தம் வெளிவரக்கூடிய பத்திரிகையாக இருக்கலாம். ஆனால் வேறொரு பத்திரிகையின் உள்ளே இணைக்கப்பட்டதாக இல்லாமல் தனியாக வெளிவரக்கூடிய பத்திரிகையாக அமைய வேண்டும். விருதுக்காக விண்ணப்பிக்கும் விடயம் பிரசுரமாகிய பத்திரிகை, தொடர்ச்சியாக 12 மாதங்கள் அச்சாகி வெளிவந்த பத்திரிகையாக அமைய வேண்டும்.



சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல்

வெயிட்ட (பத்தி) எழுத்தாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. தொடர்ச்சியான பத்தி எழுத்தாளர்களாக இருக்க வேண்டும். விவரணங்கள் புனைப் பெயர்களிலும் அமையலாம். இங்கு முக்கியமாக எழுத்தாளரின் தனித்துவமான பாங்கு எதிர்பார்க்கப்படுகின்றது. இவ்விருதுக்கு எழுத்தாளர்களிடையே மொழி வல்லமை கவனத்தில் எடுக்கப்படும். குறித்த வருடத்திற்குள் குறைந்தபட்சம் 12 விடயங்களாவது பிரசுரிக்கப்பட்டதாக இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் 06 இற்கும் குறையாத ஆக்கங்களை சமர்ப்பிக்க வேண்டும். புனைப் பெயரில் சமர்ப்பிக்கப்பட்ட ஆக்கம் தொடர்பாக அதற்கு அனுசரணையாக ஆசிரியரின் உறுதிப்படுத்தலும் விளக்மொன்றும் அவசியமாகின்றது. அத்துடன் பத்தியானது முழுப்பக்கத்தையும் உள்ளடக்கியதாக இல்லாது இரண்டில் ஒரு பகுதியில் உள்ளடக்கியதாக அமைய வேண்டும்.

## ஆண்டின் சிறந்த சமூக அபிவிருத்தி செய்தியாளருக்கான சுப்பிரமணியம் செட்டியார் விருது

குரல் கொடுக்க யாரும் இல்லாத மக்களின் சமூகப் பிரச்சினைகளை நியாயமான முறையிலும் நடுநிலையாகவும் ஒழுக்கக் கோவையை கடைபிடித்ததாகவும் முன்வைத்து கட்டுரைகள் ஆக்கங்களை எழுதிய ஊடகவியலாளர்கள் இவ்விருதுக்காக விண்ணப்பிக்க முடியும். அத்துடன் அவை மூலம் மக்களின் பிரச்சினைகள் வெளிப்படுத்தப்பட்டு தீர்வுகளை நாடச் செய்ததாக இருந்தால் வரவேற்கத்தக்கதாகும். தொழிலாளர்களின் குரலாக செயற்பட்டு அதற்காக தொடர்ச்சியாக குரல் எழுப்பும் நோக்கில் 1930 ஆண்டு காலப்பகுதியில் வீரகேசரி பத்திரிகையை ஆரம்பித்த சுப்பிரமணியம் செட்டியாரின் ஞாபகார்த்தமாக இவ்விருது வழங்கப்படுகின்றது.

## ஆண்டின் சிறந்த விவரணக் கட்டுரையாளருக்கான உபாலி விஜேவர்தன விருது (மும் மொழிகளிலும் வழங்கப்படும்)

மும்மொழிகளிலும் இவ்விருது வழங்கப்படும். உபாலி விஜேவர்தன பத்திரிகை நிறுவனத்தின் ஸ்தாபகராகிய உபாலி விஜேவர்தனவின் ஞாபகார்த்தமாக வழங்கப்படும் இவ்விருதுக்காக பல்வேறுபட்ட விடயங்களையும் முன்வைத்து மக்கள் மத்தியில் விழிப்புணர்வையும் அறிவையும் ஏற்படுத்தும் வகையில் பிரசுரமாகிய 06 இற்கும் குறையாத கட்டுரைகளை சமர்ப்பிப்பதன் மூலம் மும்மொழிகளிலும் இருந்து இவ்விருதுக்கு தகுதியானவர்கள் தெரிவு செய்யப்படுவர். கட்டுரைகள் நியாயமானதாக அமைவதோடு சரியாகவும்

ஒவ்வொரு சமர்ப்பணத்துடனும் அதற்கு துனையான 250 சொற்களுக்குக் குறையாத அறிக்கையொன்று இணைக்கப்பட வேண்டும். குழுவாக சமர்ப்பிக்கும்போது பத்திரிகையின் ஆசிரியரின் அறிக்கை தேவைப்படுகின்றது. ஒவ்வொரு விண்ணபபத்துடனும் அதற்குரியதாக 6 இற்கு குறையாத ஆக்கங்களாவது அனுப்பப்பட வேண்டும்.

(குழுவாக இந்த விடயம் முன்வைக்கப்பட்டிருந்தால் விண்ணபபத்திற்கான விளக்கத்தை பத்திரிகையின் ஆசிரியரின் அறிக்கையொன்றுடன் சமர்ப்பிக்க வேண்டும்.)

## ஆண்டின் சிறந்த புலனாய்வுச் செய்தியாளருக்கான விருது

தேசிய முக்கியத்துவத்தினைக் கருத்தில் கொண்டு, தனிப்பட்ட ஒருவரால் அல்லது குழுவினரால் சமர்ப்பிக்கப்பட்ட புலனாய்வுச் செய்திக்காக/ அறிக்கைக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது. குறிப்பாக குற்றச் செயல்கள், அரசியல் விடயங்கள், ஊழல் மோசடிகள் மற்றும் நிர்வாக சீர்கேடுகள் தொடர்பான துறைகளை அடிப்படையாகக் கொண்டு புலனாய்வுகள் செய்யப்பட்டிருக்க வேண்டும். புலனாய்வுச் செய்தி அல்லது அறிக்கையின் பிரதியுடன் 250 சொற்களுக்கு மேற்படாத விளக்கமொன்றையும் அதனுடன் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். (ஒருவருக்கு மேற்பட்டவர்களால் மேற்கொள்ளப்பட்ட புலனாய்வுத் தேடலாயின் அது தொடர்பாக பத்திரிகையின் ஆசிரியரால் 250 சொற்களுக்கு மேற்படாத அறிக்கையொன்றையும் கூடவே சமர்ப்பிக்க வேண்டும்) குறித்த புலனாய்வுத் தேடலில் பயன்படுத்தப்பட்ட ஊடக தொழில் தரம், தொழில்நுட்பம் மற்றும் அதன் சமூகத் தாக்கம் என்பன தொடர்பாக நடுவர்கள் கவனம் செலுத்துவார்கள். புலனாய்வுக்காக உட்படுத்திய விடயங்கள் தொடர் பின்னணியைக் கொண்டிராதபோதும் தேசிய முக்கியத்துவம் மற்றும் பொதுமக்கள் ஆர்வம் வெளிப்படுத்தப் பட்டதாக அமைய வேண்டும்.

## ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ. சிரிவர்தன விருது (மும் மொழிகளிலும் வழங்கப்படும்)

தலைசிறந்த பத்திரிகை ஆசிரியராக இருந்த பி.ஏ.சிரிவர்தனவுக்கு கௌரவமளிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது. சிறப்பான விடயங்களை முன்வைத்து மக்கள் மத்தியில் பொது அபிப்பிராயத்தையும் எதிர் விவாதங்களையும் கட்டியெழுப்பும் வகையில் துனிச்சலுடன் தகவல்





**பிரசுரமாகிய காலப்பகுதி**

விருதுக்காக விண்ணப்பிக்கும் கட்டுரை அல்லது செய்திகள் 2015 ஜனவரி 01 ஆம் திகதி முதல் 2015 டிசம்பர் 31 ஆம் திகதிக்குட்டபட்ட காலப்பகுதியில் பிரசுரமாகியதாக இருக்க வேண்டும்.

**எவ்வாறு விண்ணப்பிப்பது**

விண்ணப்பங்கள் மற்றும் நியமனங்கள் : பொறுப்பாளர், சிறந்த ஊடகவியலார்களுக்கான விருது வழங்கள், இலங்கை பத்திரிகை ஸ்தாபனம், இல : 96, பேர்னாட் சொய்சா மாவத்தை (கிருல வீதி) கொழும்பு - 05 என்ற முகவரிக்கு அனுப்ப வேண்டும்.

**விண்ணப்ப முடிவுத் திகதி**

2016 ஏப்ரில் 20 ஆம் திகதி.

## விண்ணப்பிப்பதற்குரிய பொதுவான விதிமுறைகள்

- விண்ணபப்படிவம் மூன்று பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
- விண்ணபதாரியின் பெயர் தெளிவான பெரிய எழுத்துக்களில் எழுதப்பட்டிருக்க வேண்டும்.
- விண்ணபத்துக்காக ஆக்கங்களின் பிரதிகள் சமர்ப்பிக் கப்படுவதாயின் அவை ஒவ்வொன்றும் பத்திரிகையின் ஆசிரியரின் கையொப்பம் மற்றும் இறப்பர் முத்திரையுடன் இருக்க வேண்டும்.
- சமர்ப்பணங்கள் ஒழுங்காகவும் உறுதியாகவும் பைன்ட் செய்யப்பட்டிருக்க வேண்டும். உறுதி இல்லாததும் கலன்று போகும் வகையிலுமான சமர்ப்பனங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
- விண்ணப்பிக்கும் விருதுக்கான பிரிவானது சரியாக புள்ளடியிடப்பட்டு குறிக்கப்பட்டிருக்க வேண்டும்.
- விண்ணப்பிக்கும் பிரிவுக்குரிய கேட்கப்பட்ட எண்ணிக்கையான கட்டுரைகள், செய்திகள் மற்றும் புகைப்படங்கள் என்பன உரிய முறையில் விண்ணபத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- தேவைப்படும் பிரிவுகளுக்கான சமர்ப்பிக்க வேண்டிய விபரம் விண்ணபத்துடன் இணைக்கப்பட்டிருக்க வேண்டும். அத்துடன் அந்த அறிக்கை 250 சொற்களுக்கு மேற்படாததாகவும் அமைய வேண்டும்.
- விண்ணபதாரியான ஊடகவியலாளரும் அந்த பத்திரிகையும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவால் அறிமுகம் செய்யப்பட்டு கண்காணிக்கப்படுகின்ற பத்திரிகைத் துறையினருக்கான

ஒழுக்கக்கோவைக்கு உடன்படுவதென்பதையும் இலங்கை பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழுவின் ஒழுங்கு விதிகளுக்கு கட்டுப்படுவதென்பதையும் உறுதி செய்யும் வகையில் உரிய இடத்தில் பத்திரிகை ஆசிரியரின் கையொப்பம் இடப்பட்டிருக்க வேண்டும்.

- புணைப் பெயர் பயன்படுத்தப்பட்டிருப்பதாயின் விண்ணப்பதாரியும் புணைப்பெயரில் விண்ணப்பிப்பவரும் ஒரே நபர் என்பதை உறுதிப்படுத்தும் வகையில் பத்திரிகை ஆசிரியரால் முன்வைக்கப்படும் அத்தாட்சிக் கடிதம் இணைக்கப்பட்டிருக்க வேண்டும்.
- ஆசிரியர் விண்ணப்பப்படிவத்தில் கையொப்பமிடுவதற்கு முன்னர் விண்ணப்பதாரியால் சமர்ப்பிக்கப்படுகின்ற விருதுக்கான துறையானது பொறுத்தமானதா என்பதை பரிசீலனை செய்து பார்க்க வேண்டும். ஒரு துறைக்கு ஒரு விண்ணப்பப் படிவம் மாத்திரமே சமர்ப்பிக்கப்பட வேண்டும். எவ்வாறாயினும் குறித்த விண்ணப்பம் வேறும் ஒரு பிரிவுக்கு பொறுத்தமானதா என்பதை நடுவர் குழுவே தீர்மானிக்கும்.
- விண்ணப்பதாரி ஒன்றுக்கு மேற்பட்ட பத்திரிகைகளில் கடமை புரிபவராயின் விண்ணப்பதாரி எந்த பத்திரிகைக்குரியவர் என்பதை குறிப்பிட்ட பத்திரியையின் ஆசிரியரே தீர்மானிப்பார்.
- பிரசுரிக்கப்பட்ட பின்னர் ஏதாவது திருத்தங்கள் அல்லது தெளிவுபடுத்தல்கள் பிரசுரிக்கப்பட்டிருந்தால் அதனையும் விண்ணப்பப்படிவத்தின் ஒரு பகுதியாக சமர்ப்பிக்க வேண்டும். பிரசுரத்திற்கு எதிராக வேறும் ஏதாவது எழுத்து மூலமான முன்வைப்புக்கள் அல்லது விளக்கங்கள் செய்யப்பட்டிருந்தால் அதன் பிரதியையும் குறிப்பிட்ட செய்திப் பத்திரிகையின் பொறுப்பு வெளிப்பாட்டையும் விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்ப வேண்டும்.
- தேவைப்படும் பட்சத்தில் நடுவர் குழு விண்ணப்பதாரியை அழைத்து அதுபற்றிய கருத்தை அறிந்து கொள்ள முடியும்.
- விண்ணப்பித்த பின்னர் அது தொடர்பாக செய்யப்படும் கருத்துப் பரிமாற்றம், விவரம் கோரல் அல்லது நடுவர்களை அச்சுறுத்தும் வகையிலான நடவடிக்கைகள் விண்ணப்பப் படிவத்தை நிராகரிக்கச் செய்வதற்கு காரணமாக அமைந்து விடும்.



சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல்

இவ்விருதுக்காக விண்ணப்பிக்கின்றபோது சமர்ப்பிக்கும் பத்திரிகையின் எல்லாப் பக்கங்களையும் உள்ளடக்கியதாக
மூலப் பிரதியின் 06 பிரதிகளையாவது விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

## டென்சில் பீரிஸ் விருது - ஆண்டின் சிறந்த இளம் செய்தியாளருக்கானது

டென்சில் பீரிஸ் அவர்கள் இலங்கையின் சிறந்த செய்தியாளர்களில் ஒருவராகக் கருதப்பட்டார். அவரின் ஞாபகார்த்தமாக இவ்விருது வழங்கப்படுகின்றது. நியாயமானதும் சரியானதுமான முறையில் செய்தித்தேடலில் ஈடுபட்டு திறமைகளை வெளிப்படுத்திய 26 வயதுக்கு குறைந்த ஆண், பெண் இருபாலாரையும் சேர்ந்த செய்தியாளர்களுக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது.

சிறந்த முறையில் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் செய்தித் தேடலில் ஈடுபட்ட மற்றும் கட்டுரைகளை எழுதிய இளம் செய்தியாளரைக் கண்டறிவதில் நடுவர்கள் ஆர்வமாக உள்ளனர். சிறந்த இளம் செய்தியாளருக்கான இவ்விருதைப் பெற்றுக்கொள்ளும் செய்தியாளருக்கு இதழியல்துறையோடு தொடர்புபட்ட புலமைப்பரிசில் ஒன்றும் வழங்கப்படும்.

## ஆண்டின் சிறந்த சூழலியல் பத்திரிகையாளர் (மும் மொழிகளிலும் வழங்கப்படும்)

சுற்றாடல் தொடர்பாக விஷேட கவனம் செலுத்தி சூழலைப் பாதுகாப்பதற்காகவும் சுற்றாடல் பாதிப்பை மக்களுக்கு எடுத்துக்கூறி வருடம் முழுவதும் சூழலைப் பாதுகாக்கும் நோக்கில் மக்கள் மத்தியில் தாக்கத்தையும் விழிப்புணர்வையும் ஏற்படுத்தும் வகையில் தகவல் வெளிப்படுத்திய பத்திரிகையாளர்கள் அல்லது குழுவினர் இந்த விருதுக்காக விண்ணப்பிக்க முடியும். சூழல் மாசடைதலைத் தடுக்கும் வகையிலும் துஷ்பிரயோகத்தை அம்பலப்படுத்தி அதிகாரிகளையும் மக்களையும் விழிப்படையச் செய்து தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் அமைந்த ஆக்கங்களை இந்த விருதுக்காக சமர்ப்பிக்க முடியும். விருதுக்கானவர்களை தெரிவு செய்வதில் நடுவர்கள் புலனாய்வு மற்றும் ஆளமாக தேடல் ஆர்வத்தை வெளிப்படுத்தியமை தொடர்பாக திறமைகள் குறித்து கவனம் செலுத்துவார்கள்.

செய்தி அறிக்கைகளை அடிப்படையாக வைத்து எழுதப்பட்ட விடயங்கள் இவ்விருதுக்கு தகைமையற்றதாக கருதப்படும்.

## ஆண்டின் சிறந்த பத்திரிகையாளருக்கான மேர்வின் டி சில்வா ஞாபகார்த்த விருது

இலங்கை பத்திரிகை ஆசிரியர் சங்கத்தின் முதலாவது தலைவரை கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது. தலைசிறந்த பத்திரிகையாளராகவும், பத்திரிகையின் அசிரியராகவும், வெளிநாட்டுச் செய்தியாளராகவும், பத்தி எழுத்தாளராகவும் இருந்த அவரை கௌரவிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படுவதால் இத்துறையில் தொடர்ச்சியாக சேவையாற்றியவர்கள் விண்ணப்பிக்கலாம். பத்திரிகைகளின் ஆசிரியர்களும் இதற்காக விண்ணப்பிக்கலாம். நாட்டில் பரந்தளவில் முக்கியத்துவம் வாய்ந்ததாகவும் மக்கள் மத்தியில் மிகுந்த ஆர்வத்தை ஏற்படுத்திய விடயங்களை அடிப்படையாகக் கொண்டதாக அறிக்கையிடல்கள் அல்லது ஆக்கங்களை முன்வைத்தவர்கள் இவ்விருதுக்காக விண்ணப்பிக்கலாம். ஒவ்வொரு விண்ணப்பத்துடனும் தேவையான ஆதாரங்களை இணைத்து சாதனைகளின் முக்கியத்துவத்தினை தெளிவுபடுத்தும் வகையில் 250 சொற்களுக்கு மேற்படாத அறிக்கையொன்றினையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

இவ்விருதானது செய்தி மற்றும் செய்தி விவரணக் கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு கவனம் செலுத்தப்பட்டதாக அமையும். சிறந்த ஊடக நுட்பமுறைகள் மற்றும் திறமை என்பன ஆக்கங்களில் வெளிப்பட வேண்டும். ஆளமான தேடல்களை அடிப்படையாகக் கொண்ட தகவல்களை மையப்படுத்தியதாகவும் அத்தகைய தகவல்களை பிரசுரித்தமைக்காக சவால்களை எதிர்கொண்டிருப்பின் அவை மேலதிக தகைமையாகக் கருதப்படும்.

## ஆண்டின் சிறந்த பத்திரிகை வடிவமைப்புக்கான விருது

பொதுமக்களின் வரவேற்பைப் பெறும் வகையிலும் கவர்ச்சியாகவும் சிறந்த முறையிலும் வடிவமைக்கப்பட்ட பத்திரிகைகளுக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது. காவர்ச்சி மிகவும் பரபரப்பு மற்றும் தாக்கத்தை ஏற்படுத்தும் வகையில் பல்சுவை அம்சங்களுடன் வெளியாகிய பத்திரிகையை அடையாளம் காண்பதில் நடுவர்கள் ஆவலாக உள்ளனர்.



சிறந்த பத்திரிகையாளர்களுக்கான விருது வழங்கல்

**பிரிவுகள்**

## சிறந்த புகைப்பட ஊடகவியலாளருக்கான விருது

வருடத்தில் சிறந்ததும் தாக்கத்தை ஏற்படுத்தக்கூடியதுமான முறையில் செய்திகளுக்கும் ஆக்கங்களுக்கும் புகைப்படங்களை திரட்டிய சிறந்த ஊடகவியலாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. இவ்வாறான புகைப்படப் பிடிப்பாளர்களால் எடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் தாக்கத்தை ஏற்படுத்திய புகைப்படங்களைப் கண்டறிவதில் நடுவர்குழு ஆவலாக உள்ளது. புகைப்படங்களின் குறிக்கோள், பண்புகள், தொழில்நுட்பம் மற்றும் நிபுணத்துவம் உட்பட அதனோடு சம்பந்தப்பட்ட விடயங்களை சிறந்த புகைப்படப் பிடிப்பாளரிடம் இருந்து அறிவதற்கும் நடுவர்கள் எதிர்பார்க்கின்றனர். பிரசுரமாகிய புகைப்படங்கள் தொடர்பாக முடியுமாயின் அதுபற்றிய விளக்கத்தையும் பிரசுரிக்கப்பட்ட பத்திரிகை, பிரசுரமாகிய திகதி ஆகிய தகவல்களுடன் புகைப்படத்தின் பிரதியையும் சமர்ப்பிக்க வேண்டும். குறைந்தபட்சம் 6 இற்கு குறையாமலும் 10 இற்கு மேற்படாததுமாக புகைப்படப் பிரதிகளை விண்ணப்பத்துடன் சமர்ப்பிக்க வேண்டும்.

தெளிவற்ற புகைப்படங்கள், டிஜிட்டல் முறையைப் பயன்படுத்தி திரிபுபடுத்தப்பட்ட புகைப்படங்கள், விளக்கத்திற்கு பொருந்தாத புகைப்படங்கள் என்பன நிராகரிக்கப்படும். அத்துடன் விருதுக்காக சமர்ப்பிக்கப்படும் புகைப்படங்கள் அழகான முறையில் கட்டமிடப்பட்டு கோர்வை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

## விஷேட நிலைமைகளில் செய்தித் தேடலுக்கான பேராசிரியர் கைலாசபதி நினைவு விருது

இலங்கையில் தமிழ் பேசும் வாசகர்கள் மத்தியில் ஊடகத்துறை மூலம் சுதந்திரத்திற்காக போராடிய சிறப்புமிகு ஊடகவிலாளர் ஒருவரை நினைவுகூரும் வகையில் இவ்விருது வழங்கப்படுகின்றது. நாட்டில் நெருக்கடி மிகுந்த சூழலில் இருந்துகொண்டு அல்லது உயரிய ஆபத்து மிகு நிலையில் அல்லது அச்சுறுத்தல் நிறைந்த நிலையில் இருந்துகொண்டு மக்களுக்கு உண்மையை அறியச் செய்வதற்காக செய்தி மற்றும் தகவல் முன்வைத்த செய்தியாளருக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது.

இவ்விருதுக்காக விண்ணப்பிக்கும் போது அதற்கு உறுதுணையாக

விண்ணப்பதாரியின் சமர்ப்பணம் ஒன்றும் எதிர்பார்க்கப்படுவதோடு குழுவாக இவ்விருதுக்கு விண்ணப்பிப்பதாயின் அந்த சமர்ப்பணம் குறித்த தகவல் வெளியாகிய பத்திரிகையின் ஆசிரியர் ஊடாக இருக்க வேண்டும். விண்ணப்பத்துடன் 10 இற்கு மேற்படாத பிரசுரங்களையும் இணைத்து அனுப்ப வேண்டும்.

பத்திரிகை ஆசிரியர் ஒருவர் அல்லது குடும்ப உறுப்பினர் ஒருவர் விண்ணப்பிப்பதாயின் ஆசிரியரின் மரணத்தின் பின்னராயினும் அவருக்கு கௌரவமளிக்கும் வகையில் இவ்விருது வழங்கப்படும்.

## ஆண்டின் சிறந்த விளையாட்டுத்துறைச் செய்தியாளருக்கான விருது (மும் மொழிகளிலும் வழங்கப்படும்)

விளையாட்டுத்துறைக்கு சிறப்புச் சேர்க்கும் வகையிலும் ஊக்குவிக்கும் வகையிலும் வழங்கப்படுகின்றது. விளையாட்டுத்துறைச் செய்திகளை வெளியிடுவதில் தேர்ச்சி மிக்க பத்திரிகையாளர்களுக்காக இவ்விருது வழங்கப்படுவதோடு இத்துறையில் முக்கியத்துவம் வாய்ந்த பிரச்சினைகள், தேவைகளை கண்டறிந்து அவற்றுக்கு தீர்வு தேடும் வகையில் முன்கூட்டியே அத்தகைய செய்திகள் தகவல்களை வெளியிடல், சேகரித்தல், ஆய்வு செய்தல் மற்றும் நேர்காணல் என்பதாகவும் அமையலாம். 6 இற்கு குறையாத ஆக்கங்களுடன் அதனை உறுதிப்படுத்தும் அறிக்கையொன்றுடன் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

## ஆண்டின் சிறந்த கருத்துப்பட ஓவியருக்கான விருது

கைப்பட வரைந்து அல்லது கணனியைப் பயன்படுத்தி வாசகர்களைக் கவரும் வகையில் தாக்கத்தை ஏற்படுத்தக் கூடியதாக ஓவியங்களை (கார்ட்டூன்) வரைந்தவர்களுக்காக இவ்விருது வழங்கப்படுகின்றது. மொழி என்ற சவாலைக் கடந்து நாட்டில் பொதுமக்களைப் பாதிக்கக்கூடிய பொதுப் பிரச்சினைகளை முன்வைத்து ஓவியங்களை வரைந்து பொது மக்கள் மத்தியில் இடம்பிடித்த ஓவியர்களைக் அடையாளம் காண்பதில் நடுவர்குழு ஆர்வமாக இருக்கின்றது. விருதுக்கு விண்ணப்பிக்கும் வருடத்திற்குள் பிரசுரமாகிய 06 இற்கு குறையாத கருத்துப்பட ஓவியங்களை விண்ணப்பத்துடன் நடுவர்களின் பார்வைக்காக சமர்ப்பிக்க வேண்டும். அத்துடன் கேளிச்சித்திரமானது கட்டுரையொன்றுக்குள் பிரசுரமானதாக இல்லாமல் தனியானதொரு இடத்தில் பிரசுரமாகியிருக்க வேண்டும்.





## விறுவிறுப்பான செய்திக்கான விருது

பொதுமக்களது ஆர்வத்தை தூண்டக்கூடிய தேசிய முக்கியத்துவம் வாய்ந்த விடயங்களை அடிப்படையாகக் கொண்டு நாட்டில் மக்கள் மத்தியில் விருவிறுப்பை ஏற்படுத்தும் வகையில் ஊடகவியலாளரால் அல்லது ஊடகவியலாளர் குழுவொன்றால் பிரசுரிக்கப்பட்ட செய்திக்காக இந்த விருது வழங்கப்படுகின்றது. குறிப்பிட்ட விடயத்துடன் அதற்கு துணையாக அறிக்கையொன்றையும் இணைத்து சமர்ப்பிக்க வேண்டும். (குழுவாக இணைந்து திரட்டப்பட்ட தகவலை அடிப்படையாகக் கொண்டு சமர்ப்பிக்கும் விண்ணப்பமாயின் ஆசிரியரின் விளக்க அறிக்கையொன்றும் அவசியமாகின்றது) விண்ணப்பதாரி அல்லது விண்ணப்பதாரிகளது சொந்த பங்களிப்பாக இருக்க வேண்டியதோடு பிரமிக்கத்தக்க ஆர்வத்தை ஏற்படுத்திய விடயமாகவும் அமைய வேண்டும்.

## ஆண்டின் சிறந்த வணிகவியல் செய்தியாளருக்கான விருது (மும் மொழிகளிலும் வழங்கப்படும்)

வணிகமும் நிதியும், பொருளாதாரம் தொடர்பாக வாசகர் மத்தியில் தாக்கத்தையும் அறிவையும் புகட்டும் வகையிலும் வணிகம் தொடர்பான புரிதலை ஏற்படுத்தும் வகையில் எழுதப்பட்ட கட்டுரைகளை அடிப்படையாகக் கொண்டு சரியாகவும் நேர்மையாகவும் கடமையாற்றிய ஊடகவியலாளர்களுக்கு இவ்விருது வழங்கப்படுகின்றது. ஆக்கங்கள் பத்திரிகைத் துறைசார் ஒழுக்கக்கோவையை அடிப்படையாகக் கொண்டு நியாயத்தன்மை, நம்பகத்தன்மை ஆகிய நெறிமுறைகளைக் கடைபிடித்ததாகவும் பத்திரிகைத்துறை ஒழுக்க நடைமுறைகளை அனுசரித்ததாக இருத்தல் வேண்டும்.

பொதுவான வாசகர்களுக்கு வணிக விடயங்கள் தொடர்பாக புதிய போக்குகளை புரிய வைத்தல், புதிய தகவல்களை வெளியிடல், எதிர்வுகூறல்களை மேற்கொண்டவர்கள் மற்றும் சிறப்பு விடயங்களை மையமாக வைத்து இத்துறையில் திறமைகளை வெளிப்படுத்தியவர்கள் குறித்து நடுவர்கள் கவனம் செலுத்தவுள்ளனர். வாசகர்கள் தொடர்பாக தெளிவாக உணர்ந்து அதற்கு ஏற்ப தகவல் வெளியிட்டவர்கள் தொடர்பாக இவ்விருதின்போது கூடுதல் கவனம் செலுத்தப்படும்.